# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 416/2022

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW 7<br>Defence<br>Court |

| | | |
|---|---|---|
| Name | : | மருத்துவர் ஆர். அன்பழகன் |
| Father's Name | : | ராஜகோபால் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 11.03.2025

**எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச. பிரிவு 317 மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது கரூர் ராஜ் ஆர்த்தோ மருத்துவமனையில் எலும்பு முறிவு மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 30.07.2018 அன்று இரவு 02.00 மணியளவில் பணியிலிருந்தபோது, கார்த்திகேயன் த/பெ. சுப்பிரமணியன் என்பவர் மருத்துவமனைக்கு அழைத்து வரப்பட்டார். அப்போது அவர் கரூர், கௌரிபுரத்திலுள்ள கங்கா பார்சல் சர்வீஸ் அருகில் அடையாளம் தெரிந்த நபர் கத்தியால் தாக்கியதால் இடது

ஒம்./-எஸ்.பி.பரத் குமார்
நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்

கையில் எலும்பு முறிவு ஏற்பட்டு அழைத்து வரப்பட்டார். அவரை பரிசோதனை செய்து உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது. மேலும் அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று காயச்சான்றிதழ் வழங்கியுள்ளேன். **காயச்சான்றிதழ் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்சொன்ன ஆயுதத்தால் தாக்கப்படும்போது மேற்சொன்ன காயம் ஏற்பட வாய்ப்புள்ளது. போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

கத்தி போன்ற கூர்மையான ஆயுதத்தால் தாக்கப்படும்போது உடம்பில் வெளிக்காயங்கள் ஏற்படும் என்றால் சரிதான். காயச்சான்றிதழில் நோயாளிக்கு வெளிக்காயங்கள் இருப்பதாக நான் கூறவில்லை என்றால் சரிதான். என்னுடைய காயச்சான்றிதழின்படி எக்ஸ்ரே எண், ஸ்கேன் எண், சி.டி.ஸ்கேன் எண் எதுவும் காயச்சான்றிதழில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் போலிசாருக்கு மேற்படி எக்ஸ்ரே, ஸ்கேன், சி.டி.ஸ்கேன் போன்ற ஆவணங்கள் எதுவும் போலிசாரிடம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நோயாளிக்கு கொடுங்காயங்கள் ஏற்பட்டதாக நான் காயச்சான்றிதழில் குறிப்பிட்டது சரியல்ல என்றால் சரியல்ல. என்னுடைய கருத்துரை முழுமையானது என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்./-எஸ்.பி.பரத் குமார்
நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்